Registered as a Newspaper

**Spoken English**
by
**S. B. IYAR**
தூர இடங்களிலிருந்து வருபவருக்கு.
ஆரம்பம்: 02-03-1987
நேரம்: 10-30 — 11-30
12, வைமன் வீதி, நல்லூர்.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை: ரூ. 1-25

**TOEFL CLASSES**
by
**S. B. IYAR**
சனி / ஞாயிறு
1-30 — 2-30
12, வைமன் வீதி, நல்லூர்.

மலர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு மாசி மீ 15 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமா ஆகிர் பிறை 28 (27-02-1987) UTHAYAM A LIVELY TAMIL DAILY இதழ் 79

# மாவிட்டபுரம் ஆலயம் மீதும் ஹெலித் தாக்குதல்

## வசந்த மண்டபம், பழனியாண்டவர் மண்டபம் பெரும் சேதம்

காங்கேசன்துறை, பெப் 27

இராணுவத்தினால் மாவிட்டபுரம் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட ஹெலி, மோட்டோர் ஷெல், கைக்குண்டுத் தாக்குதல்களில் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் சேதம் அடைந்தது. அங்குள்ள பழனியாண்டவர் ஆலய மண்டபமும் சேதமுற்றது.

பழனியாண்டவர் ஆலய மண்டபத்தை ஹெலி மிகவும் கடுமையாகத் தாக்கியது. ஓடுகள் உடைந்து கூரைகள் சேதமடைந்தன. கோபுர வாசல் கதவும் சேதமடைந்தது.

பழனியாண்டவர் ஆலயக் கதவு ஷெல் குண்டின் துண்டு துளைத்தபடி காணப்படுகிறது.

மானவ ஆலய வசந்த மண்டபமும் ஓடுகள் உடைந்து சேதமடைந்தது.

தெற்கு வீதியிலுள்ள இசைக்கலைஞர் குடியிருந்த மடமும் பெரும் சேதமடைந்தது. வேட்டை மண்டபமும் சேதமடைந்தது.

மாவிட்டபுரம் சந்தியிலிருந்த உப மின் நிலையம் இராணுவத்தால் சேதமாக்கப்பட்டது. ஹெலி தாக்குதலால் மின் கம்பிகள் அறுந்துவிழுந்தன.

மாவிட்டபுரம்கோவில் வீதியிலுள்ள இரத்தின சபாபதிக் குருக்கள் வீடு, செங்கல்வராயர் என்பவரின் வீடு, கீரிமலை வீதியில் சிங்கராசா, மார்க்கண்டு, பரமநாதன் சுப்பிரமணியம் ஆகியோரின் வீடுகளும் மற்றும் பல வீடுகளும் சேதமடைந்தன.

"குஷியா" சட்டம் தொழிற்சாலை, மாவிட்டபுரம் சந்தியில் உள்ள கடைகள் ஆகியனவும் சேதமடைந்தன.

மாவிட்டபுரம் சந்தியில் வீட்டிலிருந்த சுமாரசாமி சர்மாவை இராணுவத்தினர் அழைத்து "பெடியங்கள் எங்கே இருக்கிறார்கள்" என்று கேட்டனர்.

தகரங்களுக்குள் என்ன இருக்கிறது என பார்த்து வருமாறும் உத்தரவிட்டனர்.

அவர் தமக்கு எதுவும் தெரியாது என்று கூற 'பூசாரியா' என்று கேட்டு விட்டு போகச் சொன்னார்களாம்.

இராணுவத்தினர் கடைகளை உடைத்து சோடா போத்தல்களை எடுத்தனர். சோடாவை உடைத்துக் குடித்துத் தாகம் தீர்த்தனர்.

## ஆனையிறவு, பரந்தன் ராணுவ முகாம்களுக்கு மேலும் சிப்பாய்கள்

யாழ்ப்பாணம், பெப் 27

கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் நேற்று ஆனையிறவு, பரந்தன் இராணுவ முகாம்களுக்கு வந்து சேர்ந்தனர்.

விசேட பயிற்சிபெற்ற இராணுவத்தினர் அனுராதபுரத்தில் இருந்து கிளிநொச்சிக்கு வந்ததாகவும் பின்னர் அவர்கள் அங்கிருந்து மேற்படி முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்றும் தெரியவருகிறது.

கவச வாகனங்கள், லொறிகள் சகிதம் சிப்பாய்கள் நடந்து வந்ததாகத் தெரிகிறது.

பயணிகள் பஸ்ஸிலும் சிப்பாய்கள் ஏறி வந்தனர்.

இதே வேளை பரந்தன், கிளிநொச்சிப் பகுதிகளில் சிப்பாய்கள் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆயத்தமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## சித்திரவதையில் இலங்கை சாதனை!

ஜெனீவா, பெப். 27

கைதிகளைச் சித்திரவதை செய்வதில் லத்தின் அமெரிக்க நாடுகளையே இலங்கை விஞ்சிவிட்டது.

ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழு தனது பிந்திய அறிக்கையில் முக்கண்ட தகவலை வெளியிட்டது.

சித்திரவதைகள் இடம்பெறும் நாடுகள் பட்டியல் ஒன்றை ஆணைக்குழு தயாரித்துள்ளது.

ஆணைக்குழுவின் பணிப்புக்கு இணங்க நெதர்லாந்து பேராசிரியர் பீட்டர் கூஜ்மான்ஸ் அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்.

அந்த அறிக்கையில் சித்திரவதை இடம்பெறும் நாடுகள் வரிசைக் கிரமமாக இடம் பெற்றுள்ளன.

அது வருமாறு:

1. ஆப்கானிஸ்தான், 2. இலங்கை, 3. எல்-சல்வடோர், 4. சிலி, 5, தென் ஆபிரிக்கா, 6. ஈரான். (உ-எ)

## மண்டைதீவுக் கடலில் 2 பெரிய கப்பல்கள்

யாழ்ப்பாணம், பெப்.27

மண்டைதீவுக் கடலில் இரண்டு பெரிய கப்பல்கள் நேற்று முதல் நங்கூரமிட்டுள்ளன.

இக்கப்பல்களில் இருந்து பல பெட்டிகளும், சாக்குகளும் இறக்கப்பட்டன என்று தெரிய வருகிறது.

இறக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் பிரங்கிப் படகுகளில் ஏற்றப்பட்டு மண்டைதீவு முகாமுக்குக் கொண்டு வரப்பட்டன. முகாமில் இருந்து கவச வாகனங்கள், டிரக் வண்டிகள் ஆகியவற்றில் பொருள்கள் கோட்டை முகாமுக்கு எடுத்துவரப் பட்டன.

பெரும் எண்ணிக்கையான சிப்பாய்களும் கப்பல்களில் வந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை மண்டைதீவில் இருந்து கோட்டைக்கு இராணுவ வாகனங்கள் ஓடித் திரிந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. (இ-10)

## மறியல் போராட்டம் இன்று தொடர்கிறது

யாழ்ப்பாணம், பெப்.27

வடக்கு வைத்தோர் சங்கத்தின் மறியல் போராட்டம் இன்றும் தொடர்கிறது.

வடபகுதி மக்களின் நகைகளைத் திருப்பிக் கொடுக்கும் வரை போராட்டம் மேலும் விஸ்தரிக்கப்படுமே தவிர கைவிடப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அடகு நகைகள் சம்பந்தமாகக் கொழும்பில் உள்ள உயர் அதிகாரிகளுடன் கலந்தாலோசிப்பதற்கென வடபிராந்திய மக்கள் வங்கியின் அதிகாரி ஒருவர் கொழும்பு சென்றுள்ளார்.

இது தொடர்பாக மேலதிகத் தகவல் ஏதும் கிடைக்காதபடியால் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

★ ஹெலி குண்டுவீச்சு; ஆலைகள், வீடுகள் சேதம்

★ 7 சிப்பாய்களுக்கு மேல் பலி: 3 பொதுமக்கள் கொலை

# மாவைச் சந்திவரை வந்த ராணுவம் பின்வாங்கியது

முச்சந்தி முனி



உவை சிப்பாய்களும், அவையின்ரை அரசாங்கமும் புதிசாகக் கண்டுபிடிக்கிறதில வலு விண்ணர் தெரியுமே, உனக்கு?

## 6 மணி நேரம் புலிகள் உக்கிரமாகத் தாக்குதல்

- காங்கேசன்துறை, பலாலி செய்தியாளர்கள் -

காங்கேசன்துறை, பெப்ரவரி 27

காங்கேசன் துறை ஹாபர்வியூ இராணுவ முகாமில் இருந்து தெல்லிப்பளை, மாவிட்டபுரம் ஆகிய இடங்களை நோக்கி மூன்று முனைகளில் முன்னேறிய இராணுவத்தினர், தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய உக்கிரமான தாக்குதல்களைத் தொடர்ந்து பின்வாங்கினர்.

இராணுவத்தினர் மாவிட்டபுரம் சந்திவரை முன்னேறிவந்த போதிலும், அவர்கள் புலிகளால் விரட்டி அடிக்கப்பட்டனர்.

இராணுவத்தினர் ஹெலியிலிருந்து குண்டு வீசியும் துப்பாக்கியால் சுட்டும் பல சேதங்களை விளைவித்தனர்.

அலுமினியம் தொழிற்சாலை, ஒன்றும் எண்ணெய் ஆலை ஒன்றும் சேதம் அடைந்தன. குண்டு வீச்சு, ஷெல் வீச்சுகளினால் பல வீடுகளும் சேதம் அடைந்தன.

காலை 5.30 மணியில் இருந்து நண்பகல் 12-00 மணி வரை நடந்த இந்தச் சமரில் சிப்பாய்கள் தரப்பில் 7 பேருக்கு மேல் இறந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. பொதுமக்களில் மூவர் கொல்லப்பட்டனர்.

சிப்பாய்களுக்கு எதிரான தாக்குதலில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒரு கட்டத்தில் ஈரோஸ் இயக்கப் போராளிகளும் சேர்ந்து கொண்டனர்.

சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுக் காலை 5-30 மணியிலிருந்து இரண்டு ஹெலிக்கொப்டர்கள் மாவிட்டபுரம், தெல்லிப்பளை, காங்கேசன் துறைப் பகுதிகளை நோக்கிப் பல தடவைகள் வட்டமிட்டன.

இதைஅடுத்து சிப்பாய்கள் கீரிமலைச் சுடலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

27—02—1987
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
6-29 முதல் 7-59 வரை
ராகுகாலம்:
10-59 முதல் 12-29 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
அமாவாசை விரதம்

## காரைநகர் அனுராதபுரம் பஸ்சேவை

யாழ்ப்பாணம், பெப் 27

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் காரைநகர் கிளை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் காரைநகர் - அனுராதபுரம் பஸ் சேவையை நடத்தவுள்ளது.

தினமும் காலை நான்கு மணிக்கு காரைநகரில் இருந்து புறப்படும் பஸ் யாழ்ப்பாணம் ஊடாக அனுராதபுரம் செல்லும். (உ-எ)

## ரயில் பாதைக்கு குண்டுவைத்தவர் யார்?

### சிப்பாய்களின் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், பெப். 27

கிளிநொச்சி வரைக்கும் ரயில்சேவை நடைபெறவிருந்ததைத் தடுத்தவர் யார்? அதற்காக ரயில் பாதைகளைச் சேதமாக்கியவர்கள் யார்?

தனியார் பஸ் உரிமையாளர்கள் என்று "கண்டுபிடித்திருக்கிறார்கள்" கிளிநொச்சிச் சிப்பாய்கள்.

தனியார் பஸ் உரிமையாளர்களை அழைத்து தங்களது "கண்டுபிடிப்பை" அவர்களிடம் இப்படிக் கூறினார்களாம் இந்தச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அணுகுண்டு, ஏவுகணைப் பரிசோதனை

### ரஷ்யாவும் அமெரிக்காவும் போட்டாபோட்டி

லண்டன், பெப். 27

ரஷ்யா 18மாத கால இடைவெளியின் பின்னர் நேற்று முதலாவது அணுகுண்டு பரிசோதனையை நடத்தியது.

இதேவேளை அமெரிக்கா இன்று (வெள்ளிக்கிழமையன்று) கனடாவின் கடல் பிராந்தியத்தின்மீது ஏவுகணைப் பரிசோதனை ஒன்றை நடத்தும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ரஷ்யா நேற்று மத்திய ஆசியப் பிராந்தியத்தில் நடத்திய இப்பரிசோதனையில் 20 கிலோ தொன் நிறையான அணுகுண்டு பயன்படுத்தப்பட்டது.

இது 1942இல் ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகியில் பயன்படுத்தப்பட்ட குண்டிலும் பார்க்க பல மடங்கு சக்தி வாய்ந்தது என்று கூறப்பட்டது.

அணு ஆயுதப் பரிசோதனைகளை நிறுத்தப்போவதாக 18 மாதங்களுக்கு முன்னர் தன்னிச்சை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இறந்தோர் காயமுற்றோர் விவரம்

காங்கேசன்துறை, பெப். 27

நேற்று மாவிட்டபுரம் பகுதியில் இடம் பெற்ற இராணுவத் தாக்குதல்களின் போது இறந்தவர்கள், காயம் அடைந்தவர்கள் விவரம் வருமாறு:-

இறந்தோர்

1. மணியம் அல்லது இரத்தினம் (மாவிட்டபுரம்) வயது 60-மூட்டை தூக்கும் தொழிலாளி

2. க. குகதாசன் (அளவெட்டி) வயது 21

3. சுப்பிரமணியம் (வயது 60) - வயாவிளானில் இவரது வீடு தகர்க்கப்பட்டதால் தெல்லிப்பளைக்குஇடம் பெயர்ந்து வந்தவர் இவர். இவரது மகன் கொழும்பில் படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 3 வீடுகள் சேதம்

பலாலி, பெப் 27

நேற்று காங்கேசன் துறை ஹாபர்வியூ ஹோட்டலில் இருந்து வெளியேறிய இராணுவத்தினரின் தாக்குதலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யூனியன் கல்லூரியும் ஷெல்லினால் சேதம்

நேற்று தெல்லிப்பளைப் பகுதியில் ஹெலியில் இருந்து நடத்தப்பட்ட 'ஷெல்' தாக்குதலினால் யூனியன் கல்லூரியின் மேல்மாடி பலத்த சேதமடைந்தது. மேல்மாடிக் கூரையின் ஒரு பகுதி பிரிந்து விழுந்துள்ளது.

யூனியன் கல்லூரிமீது நடத்தப்பட்ட 50 ஹல்பர் தாக்குதலால் மேல்மாடிக் கட்டட ஓடுகள் நூற்றுக்கணக்கில் உடைந்து விழுந்துள்ளன.

கூரை இடிந்து விழுந்த பகுதியில் மாணவர்களது மேசைகளும், கதிரைகளும் உடைந்துள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் பகுதி புகைமண்டலமாக காட்சி அளித்தது

யாழ்ப்பாணம், பெப் 27

காங்கேசன் துறைப் பகுதியில் நேற்று போராளிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையில் மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் காங்கேசன்துறைப் பகுதி ஒரே புகைமண்டலமாகக் காட்சி அளித்தது.

புகைமண்டலம் பல மைல்தூரம்வரை தெரிந்தது.

சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் சி பிளேன் ஒன்றும் அப்பகுதியில் சுற்றிக் கொண்டிருந்தது.

மாவிட்டபுரம் சந்தியில் நடைபெற்ற உக்கிரமான மோதலில் புலிகள் கிரனைட், சார்ஜ் தாக்குதல்களை மேற்கொண்டு சிப்பாய்களின் முன்னேற்றத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றிற்கு முன் பிரிட்டன் வாழ் தமிழர் ஆர்ப்பாட்டம்!

லண்டன் மேல் நீதிமன்றம் ஒன்றின் முன்னால் நூற்றுக்கும் அதிகமான இலங்கைத் தமிழர் கடந்த செவ்வாய்க்கிழமையன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரிட்டனில் வசித்து வரும் தமிழர்கள் தான் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்

கடந்த 19 ஆம் திகதி லண்டன் சென்று அடைக்கலம் கோரிய ஈழத் தமிழ் அகதிகள் 58 பேர் தொடர்பான வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த நீதிமன்றத்தின் முன்னால் சுலோக அட்டைகளைத் தூக்கிய வண்ணம் தமிழர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

"நாடுகடத்தல்: தமிழருக்கு மரண ஓலை" — என்று சுலோக அட்டைகளில் எழுதப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

**விற்பனைக்கு**

கன்னாகம் சந்திக்கும் இரயில் நிலையத்திற்கும் இடையில் எட்டு [8] பரப்பு தோட்டக்காணி வீடுகட்டவும் உகந்தது. விற்பனைக்குண்டு. தொடர்பு; எஸ். பீ சிவகுமாரன், சட்டத்தரணி செல்லாச்சி அம்மையார் வீதி, சுன்னாகம்.

## அறிவித்தல்

"கிளிநொச்சி / பரந்தன் இந்துமகா வித்தியாலய ஆசிரியர்கள் கடமைக்குத் திரும்புமாறு கேட்கப்படுகின்றனர்"

— அதிபர்

மண்டைதீவு படகுச்சேவை விஸ்தரிப்பால்

# மினிபஸ் உரிமையாளர் பெருமளவில் பாதிப்பு

மண்டைதீவு, பெப் 27

மண்டைதீவு படகுச் சேவை விஸ்தரிப்பால் இப்பகுதி தனியார் மினிபஸ் சேவை பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது. இதன் காரணமாக தற்பொழுது தினமும் காலைச்சேவை மட்டும் நடைபெற்று வருகின்றது.

பெரும்பாலான பிரயாணிகள் படகுச்சேவை மூலம் தமது பிரயாணத்தை மேற்கொள்கின்றனர்.

இதனால் தனியார் மினிபஸ் சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. டீசல் செலவுக்குக் கூட போக்குவரத்துக் கட்டணம் அறவிட முடியாமல் இருக்கின்றது என்று மினிபஸ் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக உதயன் செய்தியாளர் தனியார் மினிபஸ் சேவையாளர் சங்கத் தலைவர் திரு. சிங்கத்துரையிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, பெருந்தொகை பணத்தைச் செலவிட்டு மினிபஸ்களை வாங்கி உழைக்க முடியாமல் வாகன உரிமையாளர்கள் கஷ்டப்படுகின்றார்கள் என்று கவலையோடு தெரிவித்தனர்.

(இ-88)

## மக்கள் முகம்

### ஆலய வழிபடுவோர் சங்கம்

கொக்குவில், பெப் 27

கொக்குவில்-நந்தாவில் சுற்றுப்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வழிபடுவோர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

பின்வரும் பேரானர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர் திரு. சி பத்மநாதன் செயலாளர் திரு. செ. இராசேந்திரன் பொருளாளர் திரு. ச. பரந்தாமன், துணைத்தலைவர் திரு. கு. சண்முகநாதன், துணைச்செயலாளர் திரு கி. மாதவகுமாரன், துணைப் பொருளாளர் திரு. கே எஸ். அருளானந்தம்

செயற் குழுவினராக திரு. க ஆனந்தம், திரு. இ இரத்தினசிங்கம், திரு செ. பொன்னையா, திரு,பொ. இன்னத்துரை, திரு சி சுப்பிரமணியம், திரு. த. குமாரசாமி, திரு கு. சண்முகநாதன், திரு. இ இரஞ்சன், திரு த. தேவராசா, திருமதி த. சபாநாயகம் ஆகியோரும், கணக்காய்வாளராக திரு. தி. பரமநாதனும் தெரிவாகினர். (இ)

### ஆனைப்பந்தி உயர்கலைக்கல்லூரி நூலகத் திறப்புவிழா

யாழ்ப்பாணம் பெப், 27

ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் நூலகம் ஒன்று எதிர்வரும் ஞாயிறு காலை திறந்து வைக்கப்படும்.

வெளிவாரிப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் திரு இ யோகராசா விழாவுக்குத் தலைமை வகிப்பார்

தொழில் அதிபர் திரு. க. கனகராசா நூலகத்தைத் திறந்து வைப்பார். கிளிநொச்சி கி... மிடல் அதிகாரி திரு அ குமாரவேல், வேலணை பெரும்பாக அதிகாரி திரு. என் குழந்தைவேல், திரு எஸ் அருள்நம்பி ஆகியோர் உரை நிகழ்த்துவர். (அ)

### பாடசாலைக்கு நிதி ஒதுக்கீடு

வட்டுக்கோட்டை, பெப் 27

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு கட்டடம் கட்டுவதற்காக 1லட்சத்து 65 ஆயிரம் ரூபா இவ்வாண்டு நிதியில் ஒதுக்கப்பட்டுள்ளது.

1987ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்தே இந்த நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

வட்டுக்கோட்டை கல்வி அதிகாரி திரு ப. சண்முகராசாவின் சிபார்சுக்கிணங்கவே யாழ் செயலகம் இந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-161)

## விளையாட்டரங்கு

### பறக்கும் கழுகு வெற்றி

சுன்னாகம், பெப். 25

உடுவில் உதவி அரச அதிபர் பணிமனையால் நடத்தப்படும் ஆண்களுக்கான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் புன்னாலைக்கட்டுவன் பறக்கும் கழுகு விளையாட்டுக்கழகம் ஏழாலை முத்தமிழ் மன்ற விளையாட்டு கழகத்தைத் தோற்கடித்தது.

பறக்கும் கழுகு 14-6; 14-9; 14-4 என்ற புள்ளிகளில் முத்தமிழ் மன்றத்தை தோற்கடித்தது

பெண்கள் பிரிவுக்கான கரபந்தாட்டப் போட்டிகளிலும் பறக்கும் கழுகு பெண்களிடம் முத்தமிழ் மன்றபெண்கள் தோல்வியையே தழுவினர்,

பறக்கும்கழுகு பெண்கள் குழுவினர் திறமையான முறையில் பந்தைபோட்டதால் 14-11; 14-10; 14-10 என்ற ஸ்கோர் கணக்கில் முத்தமிழ் மன்ற பெண்கள் கோஷ்டியை வெற்றி பெற்றது

போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக திரு. துரைசிங்கம், திரு எஸ் சகாதேவன் ஆகியோர் கடமைபுரிந்தனர்.

### மாட்டீனு இல்லம் இம்முறை சாம்பியன்

யாழ்ப்பாணம், பெப் 27

யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுனர் போட்டியில் 171 புள்ளிகளைப் பெற்றமாட்டீனு இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது

சென் பற்றிக்ஸ் கல்லூரியின் ஆண்டகை தியாகுப்பிள்ளை விளையாட்டரங்கில் புதனன்று இப்போட்டி நடைபெற்றது

இந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் 144 புள்ளிகளைப் பெற்ற யோசப்பின் இல்லம் இரண்டாம் இடத்தையும்—

133 புள்ளிகளைப் பெற்ற கிளரர் இல்லம் மூன்றாவது இடத்தையும் பெற்றன.

இந்த போட்டிகளில் சிறந்த வீராங்கனைகளாக தெரிவு செய்யப்பட்டோர்

13 வயதுப் பிரிவு செல்வி கவிதா சிவபாதலிங்கம்

15 வயதுப்பிரிவுசெல்வி ஒலிவர் ஜெனிவா கணேசன் 17 வயதுப் பிரிவு செல்வி சரமிலா அக்ஸ் 19 வயதுப்பிரிவு துளசி திருஞானசம்பந்தர்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சி வி கே சிவஞானம் பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார் திருமதி சிவஞானம் பரிசில்களை வழங்கினார். (இ-7)

## சித்தன்கேணியில்

### 'சிறைப்பறவைகள்' குறுநாவல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம், பெப் 27

பிரபல எழுத்தாளர் திரு த. வைத்திலிங்கம் எழுதி 'சஞ்சீவி' வார இதழில் பிரசுரமான 'சிறைப்பறவைகள்' குறுநாவல் அறிமுகவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சித்தன்கேணி கணேச வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும்

யாழ் செயலக தலைமையக உதவி அரச அதிபர் திரு இ. கோபாலரட்ணம் தலைமை வகிப்பர்.

யாழ் ஆதீன ஆயர் வணபிதா டி. ஜே அம்பலவாணர் ஆண்டகை, சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தானம் சிவஸ்ரீ நா சர்வேஸ்வரக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

உதயன்-சஞ்சீவி ஆசிரியர் திரு ம வ. கானமயில்நாதன் சிறப்புரையும்.

'புதுவெளி' அறிமுக உரையும் வழங்குவர்.

திரு நா க தங்கரத்தினம் (நகுலன்). வித்துவான் மு சபாரத்தினம். திருமதி கோகிலா மகேந்திரன், திரு ஜி சிதம்பரநாதன், திரு சபாநாராயணன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

பட்டினத்தார் பற்றிய கணபதிப்பிள்ளை (சின்னமணி) குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சியும் இடம் பெறும்.

சங்கானை உதவி அரச அதிபர் அலுவலக உத்தியோகத்தர்கள் இந்த நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளனர்.(இ-161)

## பாடசாலை வளர்ச்சியே சமூகத்தின் வளர்ச்சி

யாழ்ப்பாணம், பெப் 27

பாடசாலை வளர்ச்சிதான் சமூகத்தின் வளர்ச்சி. இதனை இவ் வித்தியாலயப் பெற்றோர்கள் நன்கு உணர்ந்து "பாடசாலை வாரத்தில்" நல்ல திட்டங்களை வகுத்து பொது நலத்துடன் பாடசாலைத் தேவைகளை பூர்த்தி செய்தது பாராட்டத்தக்கது

யாழ் இணுவில் தம்பி இந்து வித்தியாலய "பாடசாலை வார" நாட்களில் பெற்றோரால் செய்யப்பட்ட வேலைகளையும் அன்பளிப்புகளையும் கல்வித் திணைக்களத்தின் சார்பில் பொறுப்பேற்ற நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு.க சிவநாயகமூர்த்தி மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் கா. கணேசதாசன் நன்றி கூறினார் (இ)

### பரீட்சை முடிவு

மட்டக்களப்பு, பெப்.27

அண்மையில் நடைபெற்ற கணித, விஞ்ஞான, ஆங்கில ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சை முடிவுகள் அடுத்த மாதம் நடுப்பகுதியில் வெளிவருமென எதிர்பார்க்கப் படுகிறது. (இ-)

### கால் நடை வளர்ப்போர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப். 27

யாழ்ப்பாணம் கால் நடை வளர்ப்போர் சங்கத்தின் கன்னிக் கூட்டமும் அங்குரார்ப்பணக் கூட்டமும் நாளை 28 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்துக்கு எதிரே உள்ள சுன்னாகம் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் அலுவலகத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் கால் நடை வைத்தியர் டாக்டர் ரி. வர்ணலிங்கம் தலைமை வகிப்பார்.

உத்தியோகத்தர் தெரிவும் இடம் பெறும். (இ)

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

யாழ் தொழில் நுட்பக் கல்லூரி

# பொறியியல் உபகரணங்கள் கொழும்பில் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், பெப் 27

யாழ் தொழில் நுட்பக் கல்லூரிக்காக வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான பொறியியல் உபகரணங்கள் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

தற்போது இங்குள்ள பிரச்சனைகளை மையமாக வைத்து உபகரணங்களை உயர் கல்வி அமைச்சு, மருதானை தொழில் நுட்பக் கல்லூரியில் வைத்திருக்கிறது.

யாழ் தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் திரு. ராஜேந்திரா இவ்வாறு கூறினார்.

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியின் பொறியியற் துறை மாணவர் மன்றத்தின் 'கடிதக் கோவை' வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது மன்றத் தலைவர் திரு

### 'கடிதக் கோவை' வெளியீட்டு விழாவில் அதிபர் தகவல்

துரைராஜசிங்கம் ராஜன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கல்லூரி அதிபர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்;

கொழும்பில் தடைப்பட்டுள்ள எமது கல்லூரிக்கான பொறியியல் துறை உபகரணங்களை விரைவில் இக் கல்லூரிக்கு எடுப்பிப்பதற்கு ஆவன செய்வேன்.

மாணவர்களது பிரச்சினைகளை இம் மன்றத்தின் மூலம் தீர்த்து வைப்பேன் என்றார்

விரிவுரையாளர் கைலைநாதன் உரையாற்றுகையில்;

இக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் ஒன்றே ஒன்று தான் உண்டு இதைக் கட்டிக் காப்பதும் இதன் பெருமையை உயர்த்துவதும் இங்குள்ள மாணவர் மன்றங்களின் கடமை என்றார்.

பொறியியல் பிரிவுத் தலைவர் விரிவுரையாளர் சிவலோகநாதன் பேசுகையில், மன்றத்தினர் இத்துடன் நின்றுவிடாது மலர் வெளியீடு பொருட்காட்சி என்பனவும் நடத்த வேண்டும் என்றார்.

உப அதிபர், திரு.நடராசா, திரு. சிற்சபேசன், திரு. ஸ்ரீனிவாசன், திரு முதலியார், திரு. நகுலராஜ், திரு. ஸ்ரான்லி மோகன், திரு. என். கருணாகரன், ஜி. அம்பரசி, திரு எஸ் தலராஜா ஆகியோரும் உரையாற்றினர். (இ-5)

## மகாவலிக்கு விசேட ஆயுதப்படை

கொழும்பு, பெப் 27

மகாவலி அபிவிருத்திப் பிரதேசத்திற்கென விசேட பாதுகாப்புப் படை ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வரும் சகல பகுதிகளிலும் உள்ள கிராமங்கள் நீர்ப்பாசனத் திட்டங்கள், அணைக்கட்டுகள் என்பனவற்றையும் பாதுகாப்பதற்காகவே பிரஸ்தாப படை உருவாக்கப்படுகிறது.

ஏற்கனவே இப்படையில் 750பேர் சேர்க்கப்பட்டு மின்னேரியாவில் உள்ள இராணுவ முகமில் ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்குத் தேவையான ஆயுதங்கள் அரசாங்கத்தால் வழங்கப்படும். ... வில் மேலும் 1,500 பேர் சேர்க்கப்படுவர் என அறி...

### இராமகிருஷ்ண பரமஹம்சரின் திதி பூசை

யாழ்ப்பாணம், பெப் 27

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் திதி பூசை எதிர்வரும் ஞாயிறு பிற்பகல் 3 30 மணியளவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமத்தில் நடைபெறும்.

கிளிநொச்சி கல்வி அதிகாரி திரு. கே.கே.சோமசுந்தரம் 'இராமகிருஷ்ணரின் ஞான வாழ்வு' என்னும் பொருள் பற்றி பேசுவார்.

பூசை, பஜனை நிகழ்ச்சி...

## மக்கள் விடுதலைக்கு பல்கலைக்கழகம் உயிர்நாடி

### சிந்தனை மேடை விழாவில் உரை

காங்கேசன்துறைபெப்27

மக்களின் விடுதலைக்கு பல்கலைக்கழகங்கள் உயிர் நாடி ஆகும்.

கலை இலக்கியக் களத்தினர் ஏற்பாடு செய்த சிந்தனை மேடை விழாவில் பேசுகையில் பேராசிரியர் சந்திரசேகரம் மேற்கண்டவாறு கூறினார்.

'பல்கலைக்கழக வளர்ச்சியில் தமிழ் மக்களின் பங்களிப்பு' என்னும் பொருள் பற்றிய ஆய்வுக் கட்டுரையை வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் திரு சிவராசா சமர்ப்பித்தார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் யாழ்- பல்கலைக்கழக உப-வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடந்த இவ் விழாவில் பேராசிரியர் சந்திரசேகரம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

...பட்டம் ... காலக்கட்டத்தில் பயன் அளிக்க வேண்டும் எனும் ... வேண்டிய இந்தக் கட்டுரை நமது உயர்கல்வி மரபை முழுமையாக எடுத்துக் காட்டுகிறது. இது நூலாக வெளிவர வேண்டும்.

ஒரு நாட்டு மக்கள், ஒரு இன மக்கள், ஒரு மொழி பேசும் மக்கள் விடுதலை பெறுவதற்கு முன் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு, அது மக்களின் முழு விடுதலைக்கு உயிர் நாடியாக விளங்க வேண்டும் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

பல்கலைக்கழகங்கள் தேசிய மறுமலர்ச்சி மையங்களாக, சமூக நிறுவனங்களாக, நாட்டின் அபிவிருத்தி நிலையங்களாக விளங்கவேண்டும் என்று இலங்கையின் முதலாவது பல்கலைக்கழகத் தந்தை சேர் பொன் அருணாசலம் கூறியுள்ளார்.

இந்நாடு பூரண அரசியல் விடுதலை பெறவேண்டும்

## குருநகர் இறங்கு துறையில் வெயில் கொடுமையால் படகுப் பயணிகள் அவதி

மண்டைதீவு, பெப். 27

குருநகர் இறங்குதுறை சனசந்தடியுள்ள இடமாக மாறி வருகின்றது

குருநகர் துறை – மண்டைதீவு படகுச்சேவை தினமும் நடைபெற்று வருவதால் தினமும் பெருமளவு எண்ணிக்கையான பிரயாணிகள் வந்து போகின்றார்கள்.

மத்தியான நேரங்களில் பிரயாணிகள் தங்கி நின்று பயணத்தை மேற்கொள்வதற்கு வசதியான மண்டபமோ அல்லது பந்தல்களோ இல்லாது பிரயாணிகள் அவதிப்படுகின்றார்கள்

சிரமதானப்பணி மூலமாவது குருநகர் துறையடியில் தற்காலிக பந்தல்களை அமைத்தால் பிரயாணிகள் வெயில் கொடுமையில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியும் என்று பிரயாணிகள் தெரிவிக்கின்றனர்.

## அம்பாறையில் வதந்தி பரப்புவோரைக் கைது செய்ய உத்தரவு

கொழும்பு, பெப். 27

அம்பாறை மாவட்ட சிங்கள மக்கள் மத்தியில் வதந்தி பரப்புவோரை உடனே கைது செய்யும்படி இராணுவ இணைப் பதிகாரி ேகர்ணல் தெவிந்த கலுஹறாண உத்தரவிட்டிருக்கிறார்.

இந்த உத்தரவைத் தொடர்ந்து சிலர் கைது செய்யப்பட்டனர்.

இரண்டு சிங்களக் கிராமங்களில் இனந்தெரியாத நபர்கள் நடத்திய தாக்குதலில் சிங்களக் குடியானவர்கள் உயிரிழந்தனர் அல்லவா!

அதைத் தொடர்ந்து கிராமங்களை விட்டு சிங்கள மக்கள் வெளியேறத் தொடங்கினர்.

வதந்திகள் பரவுவதைத் தொடர்ந்து இப்படி இடம் பெயர்வதைத் தடுக்குமுகமாக, வதந்தி பரப்புவோரை கைது செய்யும்படி அம்பாறை மாவட்ட இராணுவ இணைப்பு அதிகாரி பணித்திருக்கிறார்.

(இ-ஐ-எ)

## பாடசாலைகளுக்கிடையில் பொது அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், பெப் 27

பாடசாலைகளுக்கிடையிலான பொது அறிவுப் போட்டிகளை மாணவர் முன்னணியினர் நடத்த வுள்ளனர்.

போட்டிகள் பாடசாலை உயர்தர வகுப்பு மாணவர்கள் மட்டத்தில் நடத்தப்படவுள்ளன.

பங்குகொள்ள விரும்பும் பாடசாலைகள் தங்கள் விண்ணப்பங்களை பாடசாலை அதிபர் ...

மேற்படி போட்டி விவசாயம், பொருளாதாரம், அரசியல், விஞ்ஞானம், விளையாட்டு, கலாசாரம், உலக விவகாரம் என்பனவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

இதற்கான விண்ணப்பங்களை அனுப்ப விரும்புவோர் தமது சுயவிலாசத்துடன் அல்லது பாடசாலைப் பெயருடன், செயலாளர், மறுமலர்ச்சிக்கழகம், பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்...

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோவில்

### பதவி வெற்றிடம்

1. நிறைவேற்று அலுவலர்

(அ) கல்வித்தகைமைகள்:

க. பொ. த ப. (உயர்தரப்) பரீட்சையில் 2 பாடமேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது க பொ த ப. (சாதாரணதரப்) பரீட்சையில் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். குறைந்தது 3 பாடங்களில் விஷேடசித்தி

ஆ. விண்ணப்ப முடிவுத் தேதியன்று 45 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

இ. சைவசமயிகளுக்கும், ஆங்கிலமொழி அறிவு உடையவர்களுக்கும், அரசாங்க கூட்டுத்தாபனங்களில் சேவையிலிருந்து இளைப்பாறியவர்களுக்கும், ஆலய நிர்வாக விடயங்களில் அனுபவம் மிக்கவர்களுக்கும், விசேட முன்னுரிமை வழங்கப்படும்.

ஈ. பிணைப்பணம்: தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ரூபா ஐயாயிரம் காசாகவும், பத்தாயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த ஆதனத்தையும் பிணை தரத் தயாராயிருத்தல் வேண்டும். அறங்காவலர் சபையினர் தீர்மானிக்கும் வீதப்படி காசுப்பிணைக்கு வட்டி வழங்கப்படும்

2. காசாளர்:

(அ) கல்வித்தகைமைகள்

க.பொ த ப (சாதாரணதரப்) பரீட்சையில் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தி பெற்றவராயும் அத்துடன் கணிதம், தமிழ் மொழி, இந்துசமயம் ஆகிய பாடங்களில் விசேடசித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

ஆ. வயது: விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30ற்கும் 45 ற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு; சைவசமயிகளுக்கும் முன் அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்,

விண்ணப்பிக்கும் முறை:

தாமே தயாரித்த விண்ணப்பப் பத்திரங்களில் 15-03-87 ஆம் திகதிக்குப் பிந்தாமல் "செயலாளர்" ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு என்ற விலாசத்திற்கு நேரில் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இங்ஙனம்
ஆ. தியாகராசா
செயலாளர்

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

பெண்கள் நிலை உயர்த்தப்பட வேண்டும். அப்போதுதான் பண்பாடு, கல்வி, ஆற்றல், சக்தி நாட்டில் மலரும்.

— சுவாமி விவேகானந்தர்.


உதயன்

இல, 15, கிருவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி. 22073
யாழ்ப்பாணம் 27-02-1987 உ.பெ.இல. 88


# இன்றே செய்க; நன்றே செய்க

வட்டுக்கோட்டை கிழக்கு கிராம நீதி மன்றில் விசாரணைக்கு வந்த வழக்கு ஒன்று. உண்மையான சமூக நலன் விரும்பிகளை ஈர்க்க வல்லதாகும்.

கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றின் பொதுக் கூட்டங்கள் பல காலமாக உரிய முறையில் — உபவிதிகளுக்கு இணங்க — கூட்டப்படவில்லை. செயலாளர் பதவியை ஒருவரே பதினைந்து வருடங்களாக வைத்துக் கொண்டிருந்தார். செயலாளர் பதவி மற்றவர் கைக்கு மாறக் கூடாது என்பதற்காகவே உப விதிகள் கைக்கொள்ளப்படாமல், அவர் தன்னிச்சையாக நடந்து கொண்டார். இவையே வழக்கின் பிரதான குற்றச்சாட்டுகளாகும்.

சம்பந்தப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் மட்டுந்தான் அவ்வாறு நடந்து கொண்டார் என்பதல்ல எமது பகுதியில் உள்ள பெரும்பாலான கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் சமூக நல ஸ்தாபனங்களில் இதே மாதிரியான போக்கே காணப்படுகிறது. விளையாட்டுக் கழகங்கள் கூட இதற்கு விதிவிலக்கல்ல என்றால் பாருங்களேன்!

அந்தந்தப் பகுதிப் பொது நல ஸ்தாபனங்களில் முக்கிய பதவிகளை ஒரு சிலரே தமக்கெனப் பிடித்து வைத்துக் கொள்கின்றனர். அவர்களில் பலரும் தமது சொந்த நலன்களை முன் வைத்தும், பொது நலனைப் பின்னுக்குத் தள்ளியும் தன்னிச்சையாகச் செயலாற்றுவது உண்டு. பதிவு செய்யப்படும் எந்த ஒரு சங்கத்துக்கும், சட்ட அமைப்பும் உபவிதிகளும் இருக்கவே செய்யும். ஆனால் நிர்வாகத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் பலர் அவற்றைச் சட்டை செய்வதில்லை. தமது சொந்த நோக்கிலும் போக்கிலும் அலுவல்களைக் கவனிப்பார்கள்.

பொதுக் கூட்டங்கள் ஒழுங்காக நடத்தப்படுவதில்லை. புதிய நிர்வாகிகள் தெரிவு இடம் பெறுவதில்லை. பல சங்கங்கள் வெறும் கடிதத் தலைப்பு அளவிலேயே இருக்கும். செயலேரளப் போதும் பூச்சியமாகவே இருக்கும். கடிதத் தலைப்பில் நிரந்தரமாக நிர்வாகிகள் பெயரையும் அச்சிட்டு வைத்துக் கொண்டு ஆடியில் ஒருமுறை அமாவாசையில் ஒருமுறையாக ஏதாவது ஒரு மகஜரை அல்லது கடிதத்தை எழுதும் சங்கங்களே பல; மேலும் அவற்றைக் கொண்டு நடத்தும் நிரந்தர நிர்வாகிகளும் பலர்.

இவற்றை விட —

மக்களின் நன்மைக்காகவோ சங்க வளர்ச்சிக்காகவோ எதுவுமே செய்ய விரும்பாத நிர்வாகிகளும் உளர். தமது பெயருக்கும் புகழுக்கும் மட்டுமே சங்கங்களை நடத்துவோரும் உளர். அபிவிருத்தி வேலைகளைச் செய்வதற்கேனும் புதிய தலைமுறையினருக்கு அவர்கள் இடமளிப்பதில்லை. சமூக நலன் விரும்பி, வேறு எவரும் உதவி செய்ய வந்தாலும் தமது அதிகாரத்தன்மை குன்றி விடும் என்ற அச்சத்தினால் அந்த உதவிகளை ஏற்காத நிர்வாகிகளும் இருக்கிறார்கள்.

தாமும் எதுவுமே செய்யாது, மற்றவர்களையும் ஒன்றும் செய்ய விடாது வைக்கோற் பட்டடை நாய்களாகப் பலர் சமூகநல ஸ்தாபனங்களில் அட்டைகளாக ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

இவை மட்டுமா?

பல பொதுநல ஸ்தாபனங்களில் ஊழல், மோசடி, குடும்ப ஆதிக்கம் என்பனவும் மலிந்துள்ளன. பரந்துபட்ட பொதுநல சேவைக்கும், அபிவிருத்திக்கும் இடங்கொடுப்பதில்லை. உண்மையான தொண்டு செய்யப் புறப்படுபவர்கள் மீது களங்கம் கற்பித்து அவர்களை ஒதுக்கி விடுகின்றனர்.

சமூகமும் நல்லவனுக்கும் நேர்மையானவனுக்கும் ஆதரவு தராமல் மோசடிக்காரனுக்கும் செல்வாக்கு ஆதிக்க வெறிபிடித்தவருக்குமே பல சந்தர்ப்பங்களில் ஆதரவாக நிற்கிறது. இது தமிழருக்கு உண்டான மிகப் பெரும் சாபக்கேடு.

தமிழ் மக்கள் இன்றுள்ள நிலையில் அரசாங்கம் அவர்களுக்கு எந்தவித சேவையையும் செய்யும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

இவ்வேளையில் சமூகநல ஸ்தாபனங்களும், பொதுஸ்தாபனங்களும் மக்களுக்கு முழு அளவில் உதவவேண்டியவை. அவை மக்கள் தொண்டில் மனம் பதியாது, திரிகரண சுத்தி இன்றிப் பணிபுரியும் பலரின் கைகளுக்குள் சிக்கிச் சீரழிகின்றன. அரசாங்க அதிகாரிகள் என்று இருப்போரும் அவற்றை நேராக்க எதுவும் செய்வதாக இல்லை.

எனவே கண்ணியமும், நேர்மையும், தொண்டு மனமும் நிறைந்த உண்மையான சமூக சேவையாளர்களை இனங்கண்டு அவர்களிடம் பொதுஸ்தாபனங்களை ஒப்படைத்துப் பயன்பெற மக்கள் முன்வர வேண்டும். இல்லையேல் பாதிக்கப்படுவது அவர்களே.

பொதுநல ஸ்தாபனங்கள் வெறும் மகஜர் எழுதும் மன்றங்களாக இனியும் இருக்கக் கூடாது. அவை மக்கள் சேவையில் துரிதமாக ஈடுபட வேண்டியவை. நல்லவர்கள், தொண்டர்கள் நாலுபேர் இருந்தாலும் அவர்களிடம் ஒப்படைத்து உரிய மக்கள் சேவை என்ற நல்வினைவைப் பெறவேண்டும். அதனை இன்றே செய்க; நன்றே செய்க என வலியுறுத்துகிறோம்.

## ஜப்பான் தடை விதித்தது

டோக்கியோ, பெப் 26

எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் நாட்டினுள் பிரவேசிப்பதை தடுக்கும் சட்டம் ஒன்றை ஜப்பானிய அரசு அமுல் படுத்தியுள்ளது.

ஜப்பானில் இந்நோய் பரவக்கூடும் என்ற அச்சம் அதிகரித்து வருவதாலேயே இந்த ஏற்பாடு என சுகாதார அமைச்சர் தெரிவித்தார். (ஒ)

## கிளர்ச்சியாளர் கைப்பற்றினர்

மணிலா, பெப் 26

பிலிப்பீன்ஸின் வட பகுதியை கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளர்கள் தாக்கி மாநகர சபை மண்டபத்தைக் கைப்பற்றினார்கள்.

அரச துருப்புக்களுடன் சுமார் 10மணி நேரம் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டே அவர்கள் இதனைச் செய்தனர்.

கடந்த சனிக்கிழமை நடந்த இத்தாக்குதலில் பலர் கொல்லப்பட்டனர். (ஒ)

## பாகிஸ்தான் ஆப்கான் சந்திப்பு

ஜெனீவா, பெப் 26

ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவில் பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்குமான பேச்சுவார்த்தைகள் நேற்று ஜெனீவாவில் ஆரம்பமாகின.

பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சர் யாகூப்கான் தலைமையிலும், ஆப்கானிஸ்தான் வெளியுறவு அமைச்சர் அப்துல் வஹிப் தலைமையிலும் இப் பேச்சுக்கள் நடந்தன.

ஆப்கானிஸ்தானில் இருந்து ரஷ்ய துருப்புக்கள் விலகுவது பற்றியும், ஆப்கானிஸ்தான் அகதிகளால் பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வுபற்றியும் தீவிரமாக ஆராயப்பட்டது. (ஒ)

## பிரேம்நஸீர் காங்கிரஸில் சேர்ந்தார்

புதுடில்லி, பெப் 26

திரைப்பட நடிகர் பிரேம் நஸீர், இந்திரா காங்கிரஸில் சேர்ந்தார்.

புதுடில்லி சென்று பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து தனது முடிவைத் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 23 இல் நடைபெறும் கேரள மாநில சட்டசபைத் தேர்தலில்தான் போட்டியிடப்போவது இல்லை என்றும் திரு பிரேம் நஸீர் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸின் வெற்றிக்குத்தான் உழைக்கப் போவதாகவும் திரு நஸீர் மேலும் தெரிவித்தார்.

200க்கு அதிகமான படங்களில் நடித்துள்ள பிரேம் நஸீர் 'மருமகள்' போன்ற தமிழ்ப் படங்கள் மூலம் தமிழ் ரசிகர்களுக்கும் அறிமுகமானார். (ஒ)

# பாகிஸ்தானுக்கு அமெரிக்காவின் உதவி தொடருமா?

வாஷிங்டன் பெப். 26

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கவிருக்கும் 400 கோடி டாலர் உதவித்திட்டம் பற்றிய விவாதம் அமெரிக்காவில் ஆரம்பமாகியுள்ளது.

பாகிஸ்தான் அணு ஆயுத உற்பத்தியில் தீவிர கவனம் செலுத்துவது தொடர்பாக இரு நாடுகளுக்குமிடையில் வேற்றுமை நிலைமை தோன்றியிருக்கையில் இந்த விவாதம் ஆரம்பமாகியுள்ளது.

ஒப்புக் கொள்ளப்பட்ட உத்தரவாதங்களுக்குப் புறம்பாக அணு எரிப்பாருள் சாதனங்களையோ தொழில்நுட்பங்களையோ இறக்குமதி செய்யும் அல்லது ஏற்றுமதி செய்யும் எந்த நாட்டிற்கும் விதிக்கப்பட்டுள்ள கடுமையான உத்தரவுகளை பாகிஸ்தான் விஷயத்திலும் மேலும் கடைப்பிடிப்பதா இல்லையா என்பதை அமெரிக்க நாடாளுமன்றம் இந்த வருடம் முடிவு செய்தாக வேண்டும்.

ஆப்கானில் ரஷ்ய துருப்புகள் நிலைகொண்டதைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்குராணுவ உதவிகளை அளிக்கும் பொருட்டு 1981 ஆம் ஆண்டு ஆறு ஆண்டு காலத்திற்காக விதிமுறைகளை தளர்த்துமாறு ஜனாதிபதி றேகன் அப்பொழுது உத்தரவிட்டிருந்தார்.

ஆனால் அணுசாதனமொன்றை வெடிக்கக் கூடிய நிலையில் தற்பொழுது பாகிஸ்தான் இருப்பது நிருபணமாகியுள்ளது.

அணு ஆயுத ஆற்றல் உள்ள நாடுகளுக்கு உதவி அளிப்பதை தடை செய்யும் சிமிஸ்டன் திருத்தத்தை அமெரிக்க நாடாளுமன்றம் தளர்த்திய போது பாகிஸ்தானிடம் அணுகுண்டு இல்லையென்றே ஆண்டு தோறும் ஜனாதிபதி றேகன் கூறி வந்துள்ளார். (ஒ)

# இலங்கை அரசு மிகைப்படுத்தி கூறுகிறது

## என்கிறது 'புரொன்ட்லைன்'

சென்னை, பெப். 26

புலிகளின் பிரதேசங்களினுள் ஆயுதப்படையினர் வெற்றிகரமாக ஊடுருவியுள்ளனர் என்று கொழும்பு அரசு கூறுவது தரையில் உள்ள நிலையை அதிகப்படுத்திக் கூறுவதாக உள்ளது.

இப்படி சுயேச்சை வட்டாரங்கள் தெரிவித்தன என்று 'புரொன்ட்லைன்' தகவல் வெளியிட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கையின் போது அரசப் படைகள் இலகுவாக முன்னேற முடியவில்லை. புலிகளிடமிருந்து கடுமையான எதிர்த்தாக்குதலை அரசப் படைகள் எதிர்க்க வேண்டியிருந்தது. சில சமயங்களில் புலிகளிடம் ஆயுதங்கள் வரை பறிக்கப்பட்டுள்ளனவே இருந்தன.

இப்படி 'புரொன்ட்லைன்' மேலும் தெரிவித்தது. (இ-எ)

## வெளி உலகில்

### சமரச மாநாடு பற்றி இணக்கம் இல்லை

தெல்அவில், பெப் 26

மத்திய கிழக்கு சமரச மாநாடு தொடர்பாக இஸ்ரேல் பிரதமருக்கும் வெளிநாட்டு அமைச்சருக்குமிடையே கருத்து வேறு ஏற்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு சமாதானம் பற்றிப் பேசுவதற்காக மாநாடு ஒன்றைக் கூட்டுவது பற்றி எகிப்திய தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இஸ்ரேலிய வெளிநாட்டு அமைச்சர் ஷிமோன் பெரஸிற்கு எவ்வித அதிகாரமும் கிடையாது என இஸ்ரேல் பிரதமர் இம்சாக் ஷாமிர் தெரிவித்தார்.

ஷிமோன் பெரஸ் தனது கருத்துக்களை திணிப்பதற்குத் தொடர்ந்து முயற்சி செய்தால் இஸ்ரேலின் தற்போதைய தேசிய ஒருமைப்பாட்டு அரசாங்கத்தில் பிளவு ஏற்படுவது நிச்சயம் என கூறினார். (ஒ)

### மணிலாவில் மக்கள் விழா

மணிலா, பெப் 26

ஜனாதிபதி அக்கினோ மக்கள் புரட்சி மூலம் பதவிக்கு கொண்டு வரப்பட்ட ஓராண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள் புதன் கிழமை பிலிப்பீன்ஸில் விமரிசையாக நடைபெற்றன.

லட்சக்கணக்கான மக்கள் மணிலா வீதிகளில் ஆடிப்பாடி ஊர்வலங்களை நடத்தி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

ஹெலிகொப்டர்களின் மூலம் மலர்கள் தூவப்பட்டன.

ஊர்வலத்தில் பங்கு பற்றிய மக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிடேல் ராமோசை சூழ்ந்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

இதேவேளை முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் என்ரிலே விடுத்த அறிக்கையொன்றில் எதிர் வரும் மே மாதம் நடைபெறவிருக்கும் காங்கிரஸ் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்தார். (ஒ)

### ஸ்ரீரங்கத்தில் எம். ஜீ. ஆர்.

சென்னை, பெப். 26

அடுத்த மாதம் 25ஆம் திகதி நடைபெறவுள்ள ஸ்ரீரங்கம் ஆலய ராஜகோபுர மகா கும்பாபிஷேக நிகழ்ச்சியில் கலந்து கொள்ள தமிழக முதலமைச்சர் திரு. எம், ஜீ. இராமச்சந்திரன் சம்மதம் தெரிவித்திருக்கிறார்.

ஆலய அதிகாரி டாக்டர் கோபிநாத் முதலமைச்சரை இது சம்பந்தமாகச் சந்தித்து விடுத்த அழைப்பை முதல் அமைச்சர் ஏற்றுக் கொண்டார். (ஒ-எ)

### எல்லைப் பிரச்சினை

பீஜிங், பெப். 26

சீனாவுக்கும் ரஷ்யாவிற்குமிடையே எல்லைப் பிரச்சினை தொடர்பாக அடுத்த பேச்சுவார்த்தைகள் இந்த வருட இறுதியில் பீஜிங்கில் நடைபெறும்.

அண்மையில் மொஸ்கோவில் முடிந்த பேச்சுவார்த்தைகளின் போது ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது (ஒ)

# புராணக் கதைகள் தத்துவப் பாலங்களே

சைவ சமயத்தின் பிரமாண நூல் எது?

இக்கேள்விக்கு ஒரே சொல்லில் நாம் விடையளித்துவிட முடியாது. வேதம் நமது சமயத்தின் பொதுப்பிரமாண நூல். சிவாகமங்கள் நமது சிறப்புப் பிரமாண நூல்கள்.

இவையிரண்டினுள் மட்டும் நமது மதம் அடங்கி விடவில்லை. இந்த அடிப்படை நூல்களின் கருத்துக் கருவூலங்களை விளக்கும் இனிய நூல்கள் இன்னும் உண்டு.

பகவத்கீதை. இதிஹாசங்கள் இவை கூட நமது பிரமாண நூல்களே. இவையெல்லாம் மிகவும் உயர்ந்த தரத்திலுள்ள நூல்கள். சாதாரண பாமரர்களிடம் இவை நெருங்கிச் செல்லவில்லை அம்மக்கள் இவற்றை நோக்கிச் செல்லவும் இல்லை.



இக்குறைபாட்டை நீக்குவதற்கும் சமயப் பெரியார்கள் தோன்றினார்கள். இந்த ஞான நூல்களுக்கும் பாமர ஜனங்களுக்கும் இடையிலே தத்துவப் பாலங்களை உருவாக்கினார்கள். வேதாகமங்களிலே உள்ள மேலான உட்பொருள்களைப் பிழிந்தெடுத்து சாதாரண சமூக மட்டத்திலான கதை மரபு என்ற மூலாம் பூசி மக்களுக்கு வழங்கினார்கள்.

இவைகளே புராணங்கள்.

இவை மட்டுமல்லாமல் தமிழ் வேதங்களான திருமுறைகளும் திருவாசகம்...

பட்ட பிரார்த்தனை நூல்களும் உருவாக்கப்பட்டன. பாமர மக்கள் இறைவனது திருவருட் பெருமைகளையும் மது அனுட்டானங்களையும் சிறிது உணரத் தலைப்பட்டனர்.

காலப்போக்கில் மக்களின் வாழ்க்கை முறை

## ஞானக்கதிர்

கள் மாறுபட்டன. பல்வேறு துறைகளில் அவர்களின் நாட்டம் சென்று செல்கின்ற காரணத்தால் மத ஆராய்ச்சிகளில் நாட்டம் குறைந்தது.

வேதாகமங்கள் பற்றிய சிந்தனைகள் மிகவும் அருகி, அவற்றின் வழி நூல்களை மட்டும் மேலோட்டமாகப் படித்தறிவதுடன் நின்றனர் மக்கள்.

இங்குதான் நமது மதத்தின் வளர்ச்சிக்குப் பாதகமான நடைமுறைகள் ஆரம்பமாகின. புராணக் கதைகள் முதலியவற்றை மேலோட்டமான முறையில் படித்த மக்கள் அவற்றின் தத்துவார்த்தங்களையோ உட்பொருட்களையோ உணர முற்படவில்லை. புராணங்கள் சொல்லும் கதைகளே நமது சமய அடிப்படை உண்மைகள் என்று நம்பத் தலைப்பட்டார்கள்.

இன்னொரு புறத்தில், மரபுரீதியாகச் சமய அடிப்படையில் வழங்கி வந்த சில நடைமுறைகள், சட்டதிட்டங்கள், கொள்கைகளை அப்படியே கண்மூடிக் கொண்டு ... புரிந்துகொள்ள முற்படவில்லை.

கூறுவது பொருத்தமாக இருக்கும். ஒருவன்—தனது பாட்டனாரின் திவச நாளிலே தந்தையார் ஒரு பூனையைக் கட்டி வைப்பதைக் கண்டிருக்கிறான். அதே தந்தையார் இறந்தபின் அவரது திவசம் நடக்கும்போது அவன் வீட்டில் நின்ற பூனையைத் தேடினான். காணவில்லை. ஊர்முழுவதும் தேடி ஒரு பூனையைக் கொண்டு வந்து கட்டி வைத்து விட்டுத் திவசம் செய்கிறான்.

வீட்டிலே வளர்க்கப்படும் பூனை திவசத்துக்குரிய பொருட்களை அசுத்தம் செய்துவிடுமென்ற காரணத்தால் தந்தை பூனையைக் கட்டி வைத்தார். மகன் அதற்குரிய காரணத்தை ஆராய முற்படவில்லை. பூனை கட்டி வைப்பதும் திவசக் கிரியைகளில் ஒன்று என எண்ணி விடுகிறான்.

இதே போலத்தான், விளக்கம் அறியாத வழக்கங்கள் பலவற்றைக் கைக்கொள்கிறார்கள் மக்கள். இவற்றையும் நமது புராணக் கதைகளில் இடம்பெறும் பொருத்தமற்ற சில சம்பவங்களை கேலிசெய்யும்போது நம்மவர்கள் கூனிக்குறுகி விடுகின்றனர்.

புராணக் கதைகள் வெறும் கதைகளேயன்றி அவையே நமது சமய உண்மைகள் அல்ல. மரபுரீதியான நமது சமயச் சடங்குகளிலும், புராண இதிஹாசக் கதைகளிலும் அடங்கியுள்ள தத்துவ உட்பொருள்களை நாம் நன்கு புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

... புரிந்து கொள்வதுடன் ... பிறமதத்தவர்களுக்கு எடுத்துச் சொல்லவும் துணிந்தால் நமது சமயம்

ப. சிவானந்த சர்மா

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



## பொய்யாமொழி

குறள்:

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்.

பொருள்:

செல்வர் முன் வறியவர் நிற்பதுபோல் (கற்றவர்முன்) ஏங்கித் தாழ்ந்து நின்றும் கல்வி கற்றவரே உயர்ந்தவர்; கல்லாதவர் இழிந்தவர்.

## செய்திக்கொத்து

### சாதனை தினம்

யாழ்ப்பாணம், பெப். 27

"படித்த பெண்களுக்குரிய நான்கு மாத பொது விவசாயப் பயிற்சி" சாதனை தினம் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், திருநெல்வேலி உதவி அரசாங்க அதிபர், விவசாயத் திணைக்கள உயர் அதிகாரிகள், மாணவிகள், பெற்றோர்கள் இவ்விழாவில் பங்குபற்றுவர். (இ)

### 73 குடும்பங்களுக்கு 2 வார உணவு

சாவகச்சேரி, பெப். 27

கைதடி வடக்கில் அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பால் பாதிக்கப்பட்ட 73 குடும்பங்களுக்கு அகதிகள் புனர் வாழ்வுக் கழக உதவியுடன் அறவழிப் போராட்டக் குழுவினர் இரு வாரங்களுக்குப் போதுமான உணவுப் பொருள்களை விநியோகித்தனர். (இ-31)

### சிங்கள மொழி தேர்ச்சி விதிவிலக்கு

சாவகச்சேரி, பெப். 27

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமை புரியும் விசேஷ சேவை அலுவலர்களுக்கு சிங்கள மொழித் தேர்ச்சியில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டு இருப்பதாக கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு எஸ் தொண்டமான் மேற்படி சங்கத்தினருக்கு அறிவித்...

### முதலாம்தவணைப் பரீட்சை

முள்ளியவளை, பெப். 27

முல்லைத்தீவு கல்வி மாவட்டத்து பாடசாலைகளில் முதன் முறையாக முதலாம் தவணைப் பரீட்சை மார்ச் முதலாம்

## சமய சந்நிதிகளில்

### கீரிமலை முத்துமாரி கொடியேற்றம்

யாழ்ப்பாணம், பெப் 27

கீரிமலை ஸ்ரீமகாமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்தத் திருவிழாக்கள் வரும் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றன.

11ஆம் திகதி சப்பரமும், 12ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் 13ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும். (ஒ)

### வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், பெப். 27

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய கோயில் வருடாந்த உற்சவம் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறுகின்...

வாரத்தில் நடைபெறும் முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் திரு இராசுந்தரலிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் இது பற்றி தீர்மானிக்கப்பட்டது. (இ-93)

### ஆசிரியர் சம்பளம்

அச்சுவேலி, பெப். 27

நெல்லியடி கோட்டைக் கல்வி அலுவலகம் ஆசிரியர்களின் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தையும் கடந்த கால நிலுவைப் பணத்தையும் பெப்பரவரி மாதச் சம்பளத்துடன் வழங்கியுள்ளது. (இ-11)

### சீட்டிழுப்பு

கிளிநொச்சி, பெப். 27

இரத்தினபுரம் மாதர் கிராம அபிருத்திச் சங்க வளர்ச்சிக்கான அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு இன்று 26ம் திகதி வியாழக்கிழமை இரத்தினபுரம் சித்தி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெறும். (இ-76)

### பாடசாலைக்கு மின் மோட்டர் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், பெப். 27

கைவெட்டித்துறை அ. மி. த. க. பாடசாலையின் நெடுநாள் குடி தண்ணீர் பிரச்சனையை நிவர்த்திசெய்யும் முகமாக புதிய மின் மோட்டார் ஒன்று பொருத்தப்படுகிறது.

இம் மின்மோட்டாரை வல்லை பிரபல வர்த்தகர் திரு சி. தபிரிதிவிராஜ் அன்பளிப்பு செய்...

சிறந்த முறையில் வீடியோ படம் எடுப்பதற்கு
**வீடியோ விஹொன்ஸ்**
ஒளிப்பதிவாளர்
**சி. இராஜராஜனின்**
கலை நுணுக்க ஒளிப்பதிவில்
உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கல
நிழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்துகொள்ளுங்கள்
இல- 353 C, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)

# உதயன்

27 - 02 - 1987 வெள்ளிக்கிழமை

For quality Video Filming
**VIDEO VIHONS**
**RAJARAJHANS'**
Effects and Techniques in videograph
gives great pleasure for all your memorable events at home or else.
No. 353 C, Clock Tower Road,
JAFFNA.
(Near Wellington Junction)

## மாதகலில் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப் 27

மாதகல் பகுதியில் நேற்று மாலை கடலிலிருந்து தொடர்ந்து பிரயோகித் தாக்குதல் நடைபெற்றதாக அறியவருகிறது

இத்தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த வண்ணக்கிளி என்ற பெண் யாழ் ஆஸ்பத்திரியில் நேற்று நள்ளிரவு சேர்க்கப்பட்டார் (உ)

# இலங்கைக்கான உதவிகளை குறைக்க சுவீடன் முடிவு

ஸ்டொக்ஹோம், பெப். 27

இலங்கைக்கு வழங்கும் உதவிகளைக்குறைக்க சுவீடன் முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகின்றது.

மக்கள் பங்களிப்பு உள்ள ஜனநாயக நாடுகளுக்கே சுவீடிஷ் அரச உதவும் என்று வெளியுறவு அமைச்சர் திருமதி லேனா ஜெம் வாலென் அறிவித்திருக்கிறார்.

அப்படியான நாடுகள் எவை என்பதை சுவீடிஷ் வெளியுறவு அமைச்சர் வெளியிட வில்லை.

நிகரகுவா, வியட்னாம் ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளை மனதில் வைத்தே சுவீடிஷ் அமைச்சர் முன்கண்டவாறு அறிவித்து இருக்கலாம் என்று ஸ்டொக்ஹோம் அரசு வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன

ஒஸ்லோ நகரில் அண்மையில் நோர்வே சமாதான ஆராய்ச்சி நிறுவனம் ஒழுங்கு செய்த சர்வதேச மாநாடு ஒன்று நடந்தது

இலங்கை இனப்பிரச்சினை குறித்தும் இப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காணுவதற்கு வாய்ப்பு அங்கு உள்ளதா என்பது குறித்தும் ஆராயவே இம்மாநாடு நடந்தது

இம்மாநாட்டில் இலங்கை நிலைமை குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச விழிப்புக்குழு ஆகியவற்றின் அறிக்கைகள் ஆராயப்பட்டன.

இம்மாநாட்டின் பின்னர், இலங்கைக்கான தனது உதவிகளைக்குறைத்திருப்பதாக நோர்வே அரசு அறிவித்திருந்தது

## மாவைச்சந்தி வரை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைரவர் கோவிலடிப் பக்கத்திலிருந்தும், சீமெந்து தொழிற்சாலைக்கு அருகில் உள்ள தோட்டங்களின் பக்கமிருந்தும் சீமெந்துத் தொழிற்சாலைப் பிரதான வாயில் பக்கமிருந்தும் புறப்பட்டுவந்தனர்.

கீரிமலை வீதியால் வந்த சிப்பாய்கள் மீது போராளிகள் கடுமையான தாக்குதல்கள் நடத்தினர். குண்டுகளை வெடிக்க வைத்தும், துப்பாக்கியால் சுட்டும் போராளிகள் தாக்கியதை அடுத்து அவ்வீதியால் வந்த சிப்பாய்கள் பின்வாங்கினர்

### தோட்டங்கள் ஊடாக

அதே சமயம் தோட்டங்களுக்கு ஊடாகவந்த சிப்பாய்கள் மாவிட்டபுரம் சந்திவரை முன்னேறினர். அப்போதே மாவிட்டபுரம் கந்தன் ஆலயம் சேதம் அடைந்தது

மாவிட்டபுரம், சந்திக்கருகிலுள்ள வீட்டு வளவுகளுக்குள் புகுந்து பதுங்கியிருந்த சிப்பாய்கள் கைக்குண்டுகளை வீசியும், துப்பாக்கியால் சுட்டும் முன்னேற முயன்றனர்.

### குண்டுவெடிச் சத்தங்கள்

இவர்களை எதிர்த்து போராளிகள் கடும் தாக்குதல் நடத்தினர் காலை 6 மணியிலிருந்து நண்பகல் 12 மணி வரை இப்பகுதியெங்கும் ஒரே குண்டுச் சத்தமும் துப்பாக்கி வேட்டுச் சத்தமும் கேட்டவண்ணம் இருந்தன.

ஹெலியிலிருந்தும் சரமாரியான தாக்குதல்கள் இடம்பெற்றன.

போராளிகளின் 'சென்றிப்' பகுதியை நோக்கி ஹெலிக்கொப்டர் குண்டுகளை வீசியும் சரமாரியாகச் சுட்டும் தாக்குதல் நடத்தியது.

போராளிகள் பலத்த எதிர்த்தாக்குதல் மேற்கொண்டதில் நண்பகல் 12 மணியளவில் சிப்பாய்கள் முகாமுக்கு பின்வாங்கினர் சீமெந்துத் தொழிற்சாலை ஊடாக முகாம் சென்றடைந்தனர்.

இதற்கிடையில் காங்கேசன்துறை சீமெந்து

## கிரிக்கெட் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப் 27

மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கு எதிரான ஒரு நாள் சினேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனா அணி மோதுகிறது

இந்த ஆட்டம் இன்று மகாஜனா கல்லூரி மைதானத்தில்நடைபெறும்.

இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் ஏனைய சினேகபூர்வ ஆட்டங்கள் யாவும் நாளையும் தொடர்ந்து நடைபெறும்

அவை வருமாறு:-

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத்தில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதுகின்றன.

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும் யாழ் மத்திய கல்லூரி அணியும் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் மோதுகின்றன.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, தனது மைதானத்தி- நடைபெறும் போட்டியொன்றில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியுடன் மோதுகின்றது. (இ-எ)

## காங்கேசன்- - -

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

தைத் தடுத்து நிறுத்தினர்.

சம்பவத்தின் போது காயம் அடைந்த பொது மக்கள் தெல்லிப்பழை, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டனர்

புலிகள் தரப்பில் எவரும்காயம் அடையவில்லை என்று தெரிவிக்கப்பட்டது (இ-10)

ஆலை பிரதான வாசற் பக்கமிருந்து கவச வாகனங்கள் சகிதம் வந்திருந்த சிப்பாய்கள் தொழிற்சாலையின் கிழக்குப்பக்கமாக சரமாரியாக சுட்டனர். இதனால் கிழக்குப் பகுதியில் இருந்த வீடுகளின் ஓடுகள் சேதமடைந்தன. பின்பு இவர்களும் திரும்பிச்சென்றனர். (இ-68)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தம்பிப்பிள்ளை கனகசபை J. P.**

தோற்றம்: 06 - 05 - 1912 மறைவு: 23 - 02 - 1982

எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி இவ்வுலக வாழ்வை நீத்து இன்றுடன் ஐந்தாண்டு பூர்த்தியடைகின்றது. காலங்கள் கடந்து சென்றாலும் தங்கள் நிழலிலேதான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இந் நேரத்தில் உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இப்படிக்கு
குடும்பத்தினர்

தகவல்:
க. சாந்தசோதி
காங்கேசன்துறை.

## அணுகுண்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக ரஷ்யா முன்னர் அறிவித்தது.

அதன்படி எந்த அணு ஆயுத பரிசோதனையையும் ரஷ்யா நடத்தவில்லை

அமெரிக்கா இந்த ஆண்டு இரண்டு அணு ஆயுத பரிசோதனைகளை நிலத்துக்கடியில் நடத்தியதைத் தொடர்ந்து. தான் மீண்டும் அணு ஆயுதப் பரிசோதனையை நடத்தப்போவதாக ரஷ்யா அறிவித்திருந்தது

இதே சமயம் அமெரிக்கா இன்று குண்டு வீச்சு விமானத்தில் இருந்து ஏவுகணை பரிசோதனை ஒன்றைமேற்கொள்ளும் என்று வாஷிங்டனில் பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

### பாகிஸ்தானும்

இது இப்படியிருக்க, அணுகுண்டு ஒன்றை வெடிக்கவைக்கும் ஆற்றலை பாகிஸ்தான் பெற்று விட்டதாக வாஷிங்டனில் நேற்று அறிவிக்கப்பட்டது.

அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் நடத்திய ஆய்வு ஒன்றில் இருந்து இது தெரியவந்ததாக 'வாஷிங்டன் போஸ்ட்' செய்தி வெளியிட்டுள்ளது

அணுகுண்டு தயாரிப்பதற்குத் தேவையான பொருள்களை பாகிஸ்தான் பெறுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையும் இந்த ஆண்டுடன் காலாவதியாகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## யூனியன் - -

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வன

இரண்டு ஹெலிக்கொப்டர்களில் ஒன்று பாடசாலை மீது ஷெல் தாக்குதலை நடத்திய போது மற்றையது 50 ஹலிபர் தாக்குதல்களை நடத்தியது

மாடிக் கட்டட சுவர்களும். நிலப்பகுதியும் உடைந்துள்ளன (உ-119)

## இறந்தோர் . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உட்படுத்தப்பட்டுள்ளார்

### காயமடைந்தோர்

யோகராசா (24வயது) தெல்லிப்பளை

க சுவேந்திரராசா (23 வயது) அளவெட்டி இவரது சகோதரர் க குகதாசன் தாக்குதலில் உயிரிழந்துள்ளார்

மேலும் சிலர் சிறுகாயமடைந்தனர். (இ-68-119)

## 3 வீடு - - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னல் மூன்று வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன மேலும் பதினைந்து வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன

திரு. சி பரமநாதன், திரு வ. சிங்கராசா, திரு ச. கந்தையா ஆகியோரின் வீடுகளே முற்றாகச் சேதமடைந்துள்ளன.

கீரிமலை வீதியிலும் மாவிட்டபுரத்திலும், வீமன்காமம், தெல்லிப்பளைப் பகுதியிலும் 15 வீடுகள் சேதமடைந்துள்ளன. (உ-119)

## ரயில் - - -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிப்பாய்கள்.

கிளிநொச்சி வரை ரயில் ஓடுவது உங்களுக்கு உழைப்பிருக்காது ஆனால் நீங்கள்தான் புலிகளைக்கொண்டு ரயில் பாதைகளுக்குக் குண்டு வைத்தீர்கள்

இப்படி அவர்கள் கூறினார்களாம். (உ-10)

## நீத்தார் பட்டியல்

### இராசசிங்கம் அல்பிரட் பரராசசிங்கம்

வசாவிளானைச் சேர்ந்த இராசசிங்கம் அல்பிரட் பரராசசிங்கம் அவர்கள் 26-2-87 வியாழக்கிழமையன்று அகாலமரணமடைந்து விட்டார். அன்னார் திரேசம்மா அவர்களின் அன்புக் கணவரும், நிர்மலா, ராஜன், ஜெயா, வத்சலா, மக்ஸ்மாலா, சியாமளா, ஜோய், வின்சன்ட் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராயப்பு இராசசிங்கம், திருமதி தங்கம்மா இராசசிங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும், ஞானரத்தினம், பூபாலசிங்கம், குணரத்தினம், காலஞ்சென்ற துரைசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும். றெஜீனா, இம்மனுவேல், லூயிஸ் அல்பிரட். பிலோமினா, லூர்து. அருட்தந்தை பீற்றர் துரைரட்ணம், வேவி, காலஞ் சென்ற பிலிப்பாளந்தம், பொன்னுத்துரை, செல்வரெத்தினம், மரியரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற இராசேந்திரம், எட்வேட் ருஜா. கருணாநிராஜா, தம்பிஜயா, சகுந்தலா. நேசமலர் ஆகியோரின் சகலனும் குணபாலசிங்கத்தின் அன்பு மாமனும், கொன்சாகரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் வசாவிளான் சேமக்காலையில் 28-2-87 சனிக்கிழமை பி ப. 2 மணியளவில் நடைபெறும்.

மனைவி, மக்கள், உறவினர்கள்

தகவல்: அருட்திரு பீற்றர் துரைரட்ணம்

புனித யாகப்பர் ஆலயம்
குருநகர்.

## 48ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அரியராசசிங்கம விஜயபாலன் (மென்டிஸ்)**

உதயம்: 14 12 1961 அஸ்தமனம்: 11-01-1987

மரணத்தின் மூலம்
மறைக்கப்படுபவை உடல்கள்
நியாயங்கள் அல்ல
நியாயங்கள் புதைந்து பெருநெருப்பாகி
பொய்மைகளைப் பொசுக்கும்
மௌனங்களே
எங்கள் வாய்மொழிகளாய்
உனக்கு அஞ்சலி செலுத்தும்

28-02-87 சனிக்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளில் உற்றார், உறவினர் நண்பர்களைக் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

—குடும்பத்தினர்

சேச் வீதி,
உடுவில்

வடக்கின் மிகப் பிரபல்யமான
பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவு 1987
உதயன் நிறுவனத்தின் ஆதரவோடு
யாழ் ஜெ விஸ்ராஸ் னியன்ஸ்
விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும்
மிகப் பிரபல்யமான
கிரிக்கெட் வீரரை வாசகர்கள்
தெரிவு செய்யும் போட்டி



வீரரின் பெயர் ..............
கல்லூரி ..............

வாக்காளர் பெயர் ______
விலாசம் ______
ஒப்பம் ______

### நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:

(1) தொடர்ந்து மார்ச் மாத இறுதிவரை உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளில் பிரசுரமாகும் கூப்பன்களில் வடக்கின் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரராக நீங்கள் கருதும் ஆட்டக்காரரின் பெயரை நிரப்பி அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்.

(2) வாக்குக் கூப்பன்கள் அனைத்தையும் நேரடியாக உதயன் பணிமனைக்கு ''கிரிக்கெட் வீரர் தெரிவு, மே/பா. உதயன், தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம்'' என்று விலாசமிட்டு அனுப்பி வையுங்கள் அல்லது - இதற்கென உங்கள் பகுதிகளில் குறிப்பிடப்படும் இடங்களில் வைக்கப்படும் வாக்குப் பெட்டிகளில் உங்கள் கூப்பன்களை இடலாம்.

### போட்டி விதிகள்:

(1) நீங்கள் தெரிவு செய்யும் வீரர் 19 வயதுக்கு உட்பட்ட பாடசாலை வீரராக இருக்க வேண்டும்

(2) உதயன் / சஞ்சீவி பத்திரிகைகளில் வெளியாகும் கூப்பன்கள் மூலம் அளிக்கப்படும் வாக்குகள் மட்டுமே செல்லுபடியாகும்.

(3) சரியான முறையில் நிரப்பப்படாத கூப்பன்கள் நிராகரிக்கப்படும்.

(4) நீங்கள் தெரிவு செய்யும் வீரரின் முழுப் பெயரையும் கூப்பனில் எழுதுவது வரவேற்கத்தக்கது

(5) ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் அதுவரை அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணப்படும். வாக்கு எண்ணிக்கை விவரம் பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் உதயனில் பிரசுரமாகும்

ஒவ்வொரு வாரமும் முன்னணியில் இருக்கும் வீரருக்கு அந்த வாரத்தில் வாக்களித்த இரு அதிஷ்டசாலிகளுக்கு தலா 50 ரூபா பரிசு வழங்கப்படும்.

(6) போட்டி சம்பந்தப்பட்ட விடயங்களில் போட்டிக் குழுவின் தீர்ப்பே இறுதியானதும் முடிவானதுமாகும்.

★ வடக்கின் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரராகத் தெரிவு செய்யப்படும் வீரர்களுக்கு பெறுமதிமிக்க பல பரிசுகள் வழங்கப்படும்.

★ கூப்பன்களை இடுவதற்கான வாக்குப் பெட்டிகள் வைக்கப்படும் இடங்கள் :

1. வை எம். சி ஏ. மண்டபம், யாழ்ப்பாணம்.
2. ஷட்ரு நிதி நிறுவனம், யாழ்ப்பாணம்.
3. சிவா ஸ்ரோர்ஸ், கே கே எஸ் வீதி (யாழ் இந்துக் கல்லூரிச் சந்தி), யாழ்ப்பாணம்.
4. எமக்குறு கொம்யூனிக்கேசன், கே, கே, எஸ் வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.
5. துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ், சுன்னாகம் சந்தை, சுன்னாகம்.
6. ஜே எஸ் எஸ் லிமிட்டெட், உரும்பிராய்.
7. வட்டுக்கோட்டை ஸ்ரோர்ஸ், பத்திரிகை ஏஜென்ட், வட்டுக்கோட்டை
8. இ. பொன்னையா, பத்திரிகை ஏஜெண்ட், தெல்லிப்பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி 27 - 02 - 1987. தொலைபேசி இல: 24805, 22075.
Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane Power House Road, JAFFNA. Registerd as a Newspaper at the General Post office under QJ94 N 87